சட்டத்திலிருந்து விடுவிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் முந்திரி ஆலைத் தொழில், பீடி சுற்றுதல், பானை செய்தல், ஓலை முடைதல், பாய் முடைதல், தேங்காய் நார் தொழிலாளர்கள், இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் என சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அமைப்புசாரா தொழில் செய்து வருகின்றனர். இவர்கள் தரமான மருத்துவ வசதி பெறும்விதமாக மத்திய அரசின் இ.எஸ்.ஐ. சிறப்பு மருத்துவமனை, கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆசாரிபள்ளத்தில் அமைக்க மத்திய அரசு ரூ.108 கோடி ஒதுக்கீடு செய்து, தமிழக அரசிடம் 5½ ஏக்கர் நிலம் கேட்டது. ஆனால், தமிழக அரசு 2¾ ஏக்கர் நிலம் மட்டுமே ஒதுக்கியுள்ளது. எனவே, இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைய தமிழக அரசு 5½ ஏக்கர் நிலம் இலவசமாக இ.எஸ்.ஐ. நிருவாகத்திற்கு ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தில் பட்டா நிலங்களில் புதிதாக வழிபாட்டுத் தலங்கள், சர்ச்சுகள் மற்றும் மசூதிகள் கட்ட தமிழக அரசும், குமரி மாவட்ட நிருவாகமும் எளிதான நடைமுறைகளைக் கடைபிடித்து, அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக சுற்றுலாத் துறை சிறப்பாக செயல்பட அரசு அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரியில் படகு தளம் அமைத்து, கூடுதல் படகுகள் இயக்கவும், திற்பரப்பு அருவியின் மேல்புறமுள்ள படகுத் துறை மற்றும் அதனைச் சார்ந்த பூங்காவை பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டம், அரசு இரப்பர் கழகத்தின்கீழ் கீரிப்பாறை, காளிகேசம், பரளியாறு, மணலோடை, மயிலாறு, சிற்றாறு, குற்றியாறு, மருதம்பாறை, கல்லாறு ஆகிய இடங்களில் உள்ள 4,870 ஹெக்டேர் பரப்பளவில், 440 ஹெக்டேர் பரப்பை வனத் துறை வனத்தில் சேர்த்தனர். ஒரு தொழிலாளருக்கு

300 மரங்கள் வழங்கி தினசரி 16 கிலோ பால் நிருவாகத்திற்கு வழங்க வேண்டும். தொழிலாளர்களுக்கு அகவிலைப் படியோடு சேர்த்து ரூ.416.62 பைசா சம்பளமாக வழங்கப்படுகிறது.

இரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகளான வருடம் இரண்டு முறை உரமிட வேண்டும், மழை நாள் படி ரூ.100/–ம், வீட்டு வாடகைப் படி ரூ.250/–ம், கத்தி தீட்ட ரூ.500/–ம் பண்டிகை முன்பணம் ரூ.10,000/–ம், வாரச் செலவு ரூ.300/–ம் வழங்க தமிழக அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டம் அதிக மழைபெறும் மாவட்டமாகும். இந்த மாவட்டத்தில் உள்ள பழையாறு, ராஜாக்கமங்கலம், பன்றிவாய்க்கால், மணவாளக்குறிச்சி, வள்ளியாறு, குளச்சல், பாம்பூறி வாய்க்கால், குழித்துறை, தாமிரபரணி ஆகியவற்றிலிருந்து மழைக்காலங்களில் பெருகும் மழைநீர் வீணாகக் கடலில் சென்று கலக்கின்றன. வீணாகக் கடலில் கலக்கின்ற நீரை சேமிக்கவும், குடிநீர் ஆதாரம் பெருகவும், நிலத்தடி நீரை செறிவூட்டவும், வருடத்தில் 10 மாதங்கள் தண்ணீர் செல்லும் ஆறுகளில் இன்னும் கூடுதலாக தடுப்பணைகள் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

***திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழும் காலத்தில் நாமும் பிறந்தோம் என்கின்ற மகிழ்ச்சியோடு மாண்புமிகு அம்மா அவர்களின் 68 ஆம் ஆண்டு பிறந்த நாளில் எல்லா நலமும் பெற்று, வையத்துள் வாழ்வாங்கு வாழ இறைவனையும், இயற்கையையும் வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களில் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரத் துறவி சுவாமி விவேகானந்தரை மனதில் நிறுத்தி, இலக்கு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, தமிழக மக்களுக்கு பாடுபடும் ஒப்பற்றத் தலைவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அம்மா என்றாலே, proper planning, implementing and achieving. இன்றைக்கு இந்திய வரைபடத்தில் தமிழ்நாடு முதலிடம் பெறுகிறது

என்று சொன்னால், கடந்த 50 ஆண்டுகளில் சாதிக்க வேண்டிய சாதனைகளையெல்லாம் 57 மாதங்களில் சாதித்துக் காட்டியிருக்கக்கூடிய ஒப்பற்றத் தலைவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது துணை நிதிநிலை அறிக்கை. வரும் காலங்களிளெல்லாம் அம்மா இன்னும் நூறாண்டுக் காலம் வாழ வேண்டும். தமிழ் மண்ணையும், தமிழ்நாட்டையும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் ஆள வேண்டும். எல்லா நிதிநிலை அறிக்கைகளும் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலேதான் அறிவிக்க வேண்டுமென்று நான் ஆண்டவனை வேண்டுகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் தமிழ்நாட்டில் தரமான கல்வி, தரமான மருத்துவம், தரமான குடிநீர், தரமான நவீன விவசாயம், தரமான சுற்றுச்சூழல், நவீன கட்டமைப்பு என நீடித்த வளர்ச்சியைத் தமிழகம் பெற்றுள்ளது. இன்றைக்குத் தமிழ்நாட்டில் கல்வியில் ஏற்பட்டிருக்கக்கூடிய மறுமலர்ச்சி சாதாரணமானது அல்ல. கிராமப்புறங்களில் படிக்கக்கூடிய மாணவர்களெல்லாம் உயர் கல்வி மற்றும் மருத்துவக் கல்வி பெறுகின்ற வகையில் இன்றைக்கு தேர்ச்சி பெறுகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட குக்கிராமங்களில் இருக்கக்கூடிய மாணவர்களெல்லாம் அரசு பள்ளியிலே படித்து, இன்றைக்கு மருத்துவக் கல்வியிலே சேர்ந்திருக்கிறார்கள் என்று சொன்னால், கல்வியினுடைய தரம் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-50

இந்தியாவில் உயர் கல்வி பெறுபவர்களுடைய எண்ணிக்கை 23 சதவிகிதம். ஆனால், தமிழ்நாட்டில் 44.8 சதவிகிதமாக இருக்கிறது என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்கள் சுவாமி விவேகானந்தர் எந்த நோக்கத்தோடு தன்னை அர்ப்பணித்துக்கொண்டு இளைஞர்களை நல்வழிப்படுத்துவதற்கு கல்வி ஒன்றுதான் சிறந்த சாதனம் என்று நினைத்து பெருமைப்படுத்தினாரோ, அதே வேளையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இளைஞர்களை நல்வழிப்படுத்துவதற்கு கல்விதான் சிறந்த சாதனம் என்று கருதி கல்விக்காகப் பல்லாயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதேபோல், பொருளாதார ரீதியாக 8.01 சதவிகிதம் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்று சொன்னால், தமிழ்நாட்டு மக்கள் எந்த அளவுக்கு மாண்புமிகு அம்மாவின் மீது பற்றும் பாசமும் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் காண முடிகிறது.

இன்றைக்கு தமிழ்நாடு Medical Hub என்று சொல்கின்ற அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கின்றது. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அரசு மருத்துவமனைகளையெல்லாம் சென்று பார்க்கின்றபோது நான் நடந்த சம்பவம் ஒன்றைக் கூற விரும்புகிறேன். வெளிநாட்டிலேயிருந்து வருகை தந்த 6 மருத்துவர்கள் வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைச் சென்று பார்த்தார்கள். அவர்கள் கனடா நாட்டிலிருந்து வருகை தந்த மருத்துவர்கள். அவர்கள் அந்த மருத்துவமனை வளாகத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு மிகவும் நேர்த்தியாகவும், சிறப்பாகவும், தூய்மையாகவும், செம்மையாகவும் இருக்கிறதென்று பாராட்டினார்கள். எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், தனியார் மருத்துவமனைகளில் அளிக்கப்படுகின்ற சிகிச்சையைக் காட்டிலும் மிகச் சிறந்த சிகிச்சை அரசு மருத்துவமனைகளிலே இன்றைக்கு தமிழ்நாட்டில் அளிக்கப்படுகிறதென்பதைப் பாராட்டிவிட்டுச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாட்டில் Mortality rate குறைக்கப்பட்டிருக்கிறது. தனி மனிதனின் சராசரி ஆயுட்காலம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம், தமிழ்நாட்டில் மருத்துவத் துறையில் ஏற்பட்டிருக்கிற புரட்சிதான். வேலூர், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்கூட, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் செலவில், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை அரங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டில் மூன்று நகரங்களில் மாற்று அறுவைச் சிகிச்சை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வேலூருக்கும் இந்த அறுவை சிகிச்சை மையம் வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தவுடனே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று, நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்திருக்கிறார்கள்.

அதேபோல, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் தேசத்தை எந்த அளவிற்கு நேசித்தார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். 1965 ஆம் ஆண்டு இந்தியா

பாகிஸ்தான் சண்டையின்போது, தான் அணிந்திருந்த அனைத்து நகைகளையும் கழட்டி அதை அப்படியே அப்போதைய பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களிடத்தில் போர் நிதியாக அளித்தார்கள் என்று சொன்னால், இந்த தேசத்தின்மீது மாண்புமிகு அம்மா அவர்களுக்கு சிறு வயதிலேயே எந்த அளவுக்கு பற்றும், பாசமும் கொண்டிருந்தார்கள் என்பதை நான் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டு மக்களுக்கு மிகப்பெரிய பிரச்சினையாக இருந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை ஏற்பட்டபோது, தன்னந்தனியாக நின்று சட்டப் பாதுகாப்பு வழங்கிய பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால்தான் மூலை முடுக்குகளில் வாழும் மக்களெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களை சமூக நீதி காத்த வீராங்கனை என்று அழைக்கிறார்கள். எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும், தன்னுடைய ஆழ்ந்த சிந்தனையால், அறிவாற்றலால், தீர்க்கமாக யோசித்து, முடிவெடுத்து வெற்றி காண்பவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள்.

தீர்க்க முடியாத பிரச்சினை என்று கருதப்பட்ட முல்லை–பெரியாறு அணையின் உயரத்தை 142 அடியாக உயர்த்தி, நான்கைந்து மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும். தீர்க்கவே முடியாது என்று காலம் காலமாக பேசப்பட்ட காவேரி பிரச்சினையை உச்ச நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்று அரசிதழில் வெளியிட்டது, அம்மாவின் முயற்சிக்குக் கிடைத்த மகத்தான வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிற்கு, தமிழ் மக்களுக்கு எந்தத் திசையிலிருந்து ஆபத்து வந்தாலும் அதை தனக்கே உரிய தைரியத்தோடு துணிந்து நின்று வெற்றிகொள்வதுதான் மாண்புமிகு அம்மா அவர்கள். அம்மா என்றாலே வெற்றிதான். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி, மீண்டும் மீண்டும் தமிழ்நாட்டில் மலரவேண்டும் என்றுதான் மக்கள் முடிவெடுத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 2–55

ஆக, 'Amma' means 'architect of true democracy and grammar of leadership.' இதை நான் கூறவில்லை, India Today பத்திரிகையில் 'இந்தியாவிலேயே தமிழகம்தான் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது'